RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 318 | நவம்பர்.18 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## பாமக யாருடன் கூட்டணி? விரைவில் அறிவிப்பதாக ராமதாஸ் தகவல்

சென்னை, நவ.18-

சட்டப்பேரவை தேர்தலுக்கு யாருடன் கூட்டணி அமைக்கப்படும் என்று விரைவில் அறிவிப்பதாக பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை பாமக கிழக்கு மாவட்டம் சார்பில் நெமிலியில் நேற்று பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் பேசியதாவது: மதுப் பழக்கத்தை ஒழித்தால்தான் சமுதாயமும், நாடும் முன்னேறும். விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களுக்கு சரியான விலை கிடைக்க வேண்டும். ஏழைக்கு ஒரு கல்வி, நடுத்தர மக்களுக்கு ஒரு கல்வி, பணக்காரர்களுக்கு ஒரு கல்வி என்பதுபோல கல்வியின் நிலைமை உள்ளது.வன்னியர்களுக்கு மட்டுமின்றி மாநிலத்தில் உள்ள அனைத்து சாதிகளுக்காகவும் போராடி வருகிறது பாமக.

வன்னியர்களுக்கு 10.5 சதவீத இடஒதுக்கீடு வழங்க வேண்டும், இதற்காக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற 2 கோரிக்கைகளை வலியுறுத்தி டிசம்பர் 12ம் தேதி மிகப்பெரிய போராட்டம் நடத்தப்பட உள்ளது. சட்டப்பேரவை தேர்தலுக்காக யாருடன் கூட்டணி என விரைவில் முடிவெடுக்கப்படும். அந்த கூட்டணி வெற்றிக் கூட்டணியாக இருக்கும். தேர்தலுக்காக பெண்கள் 500, 1000 ரூபாய் வாங்குவதை தவிர்க்க வேண்டும். வாக்குக்கு பணம் வாங்க மாட்டோம் என உறுதியாக இருக்க வேண்டும். பெண்கள் உறுதியாக இருந்தால் நல்லாட்சி அமையும். இவ்வாறு அவர் பேசினார்.

## திமுக கூட்டணியில் உறுதியாக இருக்கிறோம் : வைகோ திட்டவட்டம்

சென்னை, நவ.18-

மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, திருச்சியில் இருந்து மதுரைக்கு (ஜன.2 முதல் 12 வரை) 'சமத்துவ நடைபயணம்' மேற்கொள்ள இருக்கிறார். இந்த பயணத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கிவைக்க உள்ளார்.

இந்த நிலையில், திருநெல்வேலி மண்டலத்துக்கு உட்பட்ட மாவட்டங்களில் இருந்து இந்த பயணத்தில் பங்கேற்க உள்ள தொண்டர்களிடம் வைகோ நேர்காணல் நடத்தினார். தென்காசி மாவட்டம் கலிங்கப்பட்டியில் இந்த நேர்காணல் நடைபெற்றது. ''உங்களுக்கு புகை பிடித்தல், மது அருந்துதல், போதை பொருட்கள் பழக்கம் உள்ளதா? 10 நாட்கள் தொடர்ந்து நடப்பீர்களா? காலில் கொப்புளம் வந்தால் தாங்கிக் கொள்வீர்களா? நீங்கள் நடைபயணம் மேற்கொள்ள அப்பா அம்மா ஒப்புதல் தருவார்களா?'' என பல கேள்விகளைக் கேட்டு, தொண்டர்களை வைகோ தேர்வு செய்தார்.



பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திராவிட இயக்கத்தை அழித்துவிடலாம் என சனாதன சக்திகளும், ஆர்எஸ்எஸ், இந்துத்வாவும் முயற்சி செய்கின்றன. திராவிட இயக்கத்தை பாதுகாக்க வேண்டும் என்ற கடமை என் கண் முன்னால் நிற்பதாலும், 61 ஆண்டுகள் திராவிட இயக்கத்தில் பாடுபட்டிருப்பதாலும், திராவிட இயக்கத்தை பாதுகாப்பது ஒன்றுதான் வாழ்நாள் கடமை என 9 ஆண்டுகளுக்கு முன்பு முடிவு எடுத்து திமுகவுடன் கூட்டணி அமைத்தோம். அதில் உறுதியாக இருக்கிறோம்.

தமிழக அரசியலில் புதிது புதிதாக சலசலப்புகள் ஏற்படுகின்றன. புதிதாக ஒருவர் வந்துள்ளார். கூட்டத்தை கூட்டி, 41 பேர் மடிந்த பிறகு கொஞ்சமும் பொறுப்பு, குற்ற உணர்வின்றி சென்னைக்கு ஓடிவிட்டார். பாதிக்கப்பட்டவர்களை தனது இருப்பிடத்துக்கு அழைத்து அனுதாபம் தெரிவித்த சம்பவம் தமிழக வரலாற்றிலேயே இல்லாதது. ஊருக்குள் ஒரு கி.மீ. தூரம் நடந்துவிட்டு, அடுத்த ஊருக்கு காரில் சென்று நடைபயணம் மேற்கொள்ளும் பித்தலாட்ட நடைபயணத்தை நாங்கள் மேற்கொள்ளவில்லை. முழுமையாக நடைபயணம் மேற்கொள்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## நவ.22ல் மேலும் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு: இந்திய வானிலை ஆய்வு மையம்

சென்னை: நவ.18-

நவ.22 ஆம் தேதி வங்கக் கடலில் மேலும் ஒரு புதிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் இலங்கை கடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி நிலவுகிறது. இது மேற்குவடமேற்கு திசையில் மெதுவாக நகர்ந்து செல்லும் என சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இதன் காரணமாக இன்று கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும் உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களில் நவம்பர் 21, 22 ஆம் தேதிகளில் கன மழை முதல் மிக கனமழை பெய்யும். நவ.22 ஆம் தேதி வங்கக்கடலில் மேலும் ஒரு புதிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது. இது மேற்குவடகிழக்கு நோக்கி நகர்ந்து அடுத்த 48 மணி நேரத்தில் மேலும் வலுப்பெற வாய்ப்பு உள்ளது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## "வரும் ஆண்டுகளிலும் தொடரட்டும் அறிவுத்திருவிழா!" : முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

சென்னை, நவ.18-

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற முற்போக்குப் புத்தகக்காட்சியின் நிறைவு நாளில் (நவ.16) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகை புரிந்து சுமார் 2 மணிநேரம் செலவிட்டு, பல புத்தகங்களை வாங்கி சென்றார்.

திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து அறிவுச்செயல்பாடுகளை முன்னெடுக்கும் இயக்கம் என்பது அனைவராலும் அறியப்பட்டதே.

அந்த வகையில், தி.மு.கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75-ஆண்டு நிறைவை முன்னிட்டு, கழக இளைஞர் அணி 'தி.மு.க 75 அறிவுத்திருவிழா' என்னும் மாபெரும் நிகழ்ச்சியை நடத்தியுள்ளது.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில், தி.மு.க இளைஞர் அணி முன்னெடுத்த 'தி.மு.க 75 - அறிவுத்திருவிழா' என்னும் மகத்தான நிகழ்ச்சியை நவ.08 அன்று கழகத்தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.



இந்நிகழ்வின் தொடக்க நாளில் 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூல் வெளியிடப்பட்டு, 'இருவண்ணக்கொடிக்கு வயது 75' தலைப்பிலான கருத்தரங்கங்கள் நடைபெற்றன. மேலும் ஒருவார காலம் நடைபெற்ற 'முற்போக்கு புத்தகக்காட்சி'யையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நவ.08 அன்று தொடங்கி வைத்தார்.

இந்நிலையில், புத்தகக்காட்சியின் நிறைவு நாளான (நவ.16) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகை புரிந்து சுமார் 2 மணிநேரம் செலவிட்டு, பல புத்தகங்களை வாங்கி சென்றார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தது பின்வருமாறு,

வள்ளுவர் கோட்டத்தில் இரண்டு மணி நேரத்துக்கு மேல் இருந்து திராவிடம், அம்பேத்கரியம், கம்யூனிசம், பெண்ணியம் என அணிவரிசையில் அமைந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட அரங்குகளைப் பார்வையிட்டு, அங்கு வந்திருந்த வாசகர்கள், ஆர்வலர்கள், பதிப்பகத்தாருடன் உரையாடியது மனநிறைவளிக்கும் அனுபவமாக அமைந்தது.

குறிப்பாக, 'Carry on, but remember' எனும் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பைக் கண்டதும் நம் அண்ணன் அன்று விடுத்த எச்சரிக்கை இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்களுக்கும் பொருத்தமாக இருக்கிறதே என வியந்தேன். என் பங்கிற்கு, அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை வாங்கிவிட்டேன்.

வாசிப்பை ஊக்குவிக்கும் தவறவிடக்கூடாத நிகழ்வாக இதனை நடத்திக் காட்டியுள்ள துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அவரது இளைஞரணி தம்பிமார்களுக்கு மீண்டுமொருமுறை எனது பாராட்டுகள்! வரும் ஆண்டுகளிலும் தொடரட்டும் அறிவுத்திருவிழா!"

## நவ.19ல் பிரதமர் மோடி கோவை வருகை : விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு

கோவை: நவ.18-

பிரதமர் நரேந்திர மோடி கோவை வருகையை முன்னிட்டு கோவை விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கோவையில் இயற்கை வேளாண் மாநாடு நவம்பர் 19,20 ம் தேதிகளில் நடக்கிறது. நவம்பர் 19ம் தேதி நடைபெறும் நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்கிறார். இதையொட்டி விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து கோவை விமான நிலைய நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பாதுகாப்பு காரணங்களுக்காக பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு கோவை விமான நிலையத்தில் தற்காலிகமாக சில கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி விமான நிலைய வளாக நுழைவாயில் முன் நவம்பர் 18ம் தேதி காலை 6 மணி முதல் நவம்பர் 19ம் தேதி மாலை 6 மணி வரை வாகனங்களை நிறுத்த முற்றிலும் தடை விதிக்கப்படுகிறது.



நுழைவாயில் பகுதியில் பயணிகளை இறக்கி விடவும், ஏற்றிச் செல்லவும் மூன்று நிமிடங்கள் வழங்கப்படும் கால அவகாசம் வழக்கம் போல் நடைமுறையில் இருக்கும். பாதுகாப்பு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவும், நவம்பர் 18, 19ம் தேதிகளில் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ள பயணிகள் மேற்குறிப்பிட்ட புதிய கட்டுப்பாடுகளை பின்பற்றவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை விமான நிலைய இயக்குநர்(பொறுப்பு) சம்பத் குமார் கூறும் போது, பிரதமர் வருகை மற்றும் உளவுத்துறை அறிவுறுத்தலின்பேரில் கோவை விமான நிலையத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பயணிகளுக்கு வழக்கமாக மேற்கொள்ளப்படும் சோதனை தவிர அனைவரும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு ஒரு சிலருக்கு இரண்டு அல்லது மூன்று முறை சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பயணிகள் மட்டுமின்றி விமான நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள், விமான நிறுவனத்தினர் உள்ளிட்ட அனைத்து துறையினரும் விமான நிலையத்திற்குள் மட்டுமின்றி வெளியே அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மத்திய தொழிற்பாதுகாப்பு படையினர் அதிதீவிர கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர்.என்றார்.

## பிரசாந்த் கிஷோரிடம் இருந்து பாடம் கற்பாரா விஜய்?

குஜராத், நவ.18-

குஜராத் முதல்வராக இருந்த மோடியை நாட்டின் பிரதமராக உயர்த்த வியூகம் வகுத்தவர், பிஹாரில் நிதிஷ்குமார், மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி, ஆந்திராவில் ஜெகன்மோகன் ரெட்டி, தமிழகத்தில் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோரின் வெற்றிக்கு வியூகம் வகுத்தவர் என்ற பெருமைக்கு சொந்தக்காரர் பிரபல தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோர்.

அவருக்கு பேரதிர்ச்சி கொடுத்திருக்கிறது பிஹார் தேர்தல் முடிவு. சொந்த மாநிலமான பிஹாரில் மிகுந்த நம்பிக்கையுடன் தனது ஜன் சுராஜ் கட்சி சார்பில் 238 தொகுதிகளில் வேட்பாளர்களை இறக்கினார். 150 இடங்களில் வெற்றி நிச்சயம் என்றார். ஆனால், போட்டியிட்ட அனைத்திலும் தோல்வி. டெபாசிட்கூட 2 தொகுதிகளில் மட்டும்தான் கிடைத்தது.

ஊருக்கெல்லாம் ஆலோசனை சொன்னவர் சறுக்கியது ஏன்? பிரசாந்த் கிஷோர் ஏற்கெனவே வேலை செய்த அத்தனை தலைவர்களுக்கும் அவர்களது கட்சி என்கிற கட்டமைப்பு மிக



வலுவாக இருந்தது. அந்த வலுவான கட்டமைப்பில் சில உத்திகளை புகுத்தி, பல வியூகங்களை வகுத்து அதை மக்கள் மத்தியில் எடுபடச் செய்து அதன்மூலம் அரசியலில் ஜொலிக்கச் செய்ய அவரால் முடிந்தது. எனவே, வியூகம் வகுப்பதைவிட கட்சி கட்டமைப்புதான் முக்கியம் என்பதை தெளிவாக உணர்த்தியிருக்கிறது இந்த தேர்தல். தமிழகத்தில் இது தவெகவுக்கான செய்தி.

கட்சித் தலைவர் விஜய், பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் என்ற இருவரை மையப்படுத்தியே செயல்பட்டு வரும் தவெகவுக்கு அடிப்படை கட்டமைப்பு மற்ற பிரதான கட்சிகள் அளவுக்கு இல்லை என்ற விமர்சனம் தொடர்ந்து முன்வைக்கப்படுகிறது. அதனால், கட்சியின் அடிப்படை கட்டமைப்பை வலுப்படுத்தாமல் வெறும் வியூகத்தை மட்டுமே நம்பி களமிறங்குவது வெற்றியை தேடித் தராது என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

ரசிகர்களுக்கான தலைவர் என்பதைக் கடந்து, பனையூரைவிட்டு வெளியே வந்து முழுநேர அரசியல்வாதியாக விஜய் மாறினால் மட்டுமே பிஹாரில் பிரசாந்த் கிஷோருக்கு ஏற்பட்டதுபோன்ற நிலைமையை தவிர்க்கலாம் என்பதும் அவர்களது கருத்தாக உள்ளது.



# பெருநகர சென்னை மாநகராட்சி 14-வது மண்டல குழு மாமன்ற ஆலோசனை கூட்டம்

புழுதிவாக்கம், நவ.18-

பெருநகர சென்னை மாநகராட்சி 14 மண்டலம் குழு ஆலோசனை கூட்டம் (நவம்பர்: 13) புழுதிவாக்கத்தில் நடைபெற்றது.

குழு தலைவர், சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழக செயலாளர்., பெருங்குடி, எஸ். வி.ரவிச்சந்திரன் தலைமையில் கல்விக் குழு தலைவர் விஸ்வநாதன் முன்னிலையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் மடிப்பாக்கத்தில் நடைபெறாமல் உள்ள பணிகளை விரைந்து முடித்திட188வதுமாமன்ற உறுப்பினர்., மடிப்பாக்கம், சாமீனா செல்வம் வலியுறுத்தினார். மேலும் ஷிமிஸி சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் குறித்து மாமன்ற உறுப்பினர் சாமீனா செல்வம் கருத்துகளையும் குறிப்பிட்டு முன் வைத்தார். கூட்டத்தில் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு கூட்டம் நடைபெற்றது.

# அடிசியா டெவலப்பர்சின் அலெர்ட் கோவை எனும் விழிப்புணர்வு பிரச்சாரம் துவக்கம்

கோவை, நவ.18-

கோவை அவினாசி சாலையில் உள்ள தனியார் ஒட்டல் அரங்கில் அடிசியா டெவலப்பர்சின் அலெர்ட் கோவை எனும் விழிப்புணர்வு பிரச்சாரம் துவக்கத்தை பற்றி செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.முன்னதாக அலெர்ட் கோவை என்னும் விழிப்புணர்வு பிரச்சாரத்தை கொடிசியா மைதானத்தில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் செந்தில் பாலாஜி, கோவை மாவட்ட ஆட்சி தலைவர் பவன் குமார் ஜி. கிரியப்பனவர்,கோவை மாநகர காவல் ஆணையர் சரவண சுந்தர்,கோவை மேயர் ரங்கநாயகி ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர்.




இது தொடர்பான செய்தியாளர்கள் சந்திப்பில் அடிசியா டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மணிகண்டன் கூறுகையில் ரியல் எஸ்டேட் துறையில் தொடர்ந்து பொது மக்கள் பயன் பெறும் விதமாக பல புதிய திட்டங்களை அறிமுக படுத்தி வருவதாகவும் அந்த வரிசையில் அலெர்ட் கோவை எனும் பிரச்சாரத்தை துவக்கி உள்ளதாக தெரிவித்தார். காலி மனை அல்லது வீடு வாங்குபவர்கள் அரசு வழிகாட்டுதல் முறைகளை எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் அலெர்ட் கோவை வழியாக ஒவ்வொரு வாரமும் பொதுமக்களுக்கு இலவசமாக தகவல்களை வழங்க உள்ளதாக தெரிவித்தார்.இந்த முயற்சி கோவையில் முதன் முறையாக துவக்கி உள்ளதாக குறிப்பிட்ட அவர்,விரைவில் தமிழகம் முழுவதும் இந்த சேவையை கொண்டு செல்ல உள்ளதாக தெரிவித்தார்.பிரச்சாரத்தின் முதல் கட்டமாக, நிலம் மற்றும் அடுக்கு மாடி வீடுகள் வாங்குவதில் ரேரா வழிகாட்டுதல் குறித்து விழிப்புணர்வு இயக்கத்தைத் தொடங்கி உள்ளதாக கூறினார்.

இன்னும் சில தினங்களில் இதற்கென தனியாக இரண்டு மையங்கள் அமைத்து காலி மனை மற்றும் வீடு வாங்குபவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை இலவசமாக வழங்க உள்ளதாக அவர் தெரிவித்தார். எந்தவொரு சொத்திலும் முதலீடு செய்வதற்கு முன் வீடு வாங்குபவர்கள் ரேரா பதிவைச் சரிபார்க்க வலியுறுத்துவதும், தவறான கூற்றுக்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதும், கோவையில் வேகமாக வளர்ந்து வரும் ரியல் எஸ்டேட் சந்தையில் அதிக வெளிப்படைத்தன்மையை ஊக்குவிப்பதே அடிசியா டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் நோக்கம் என அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அடிசியா டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் மனித வள மேம்பாடு துணை தலைவர் கிங்ஸ்டன், இயக்குனர் செந்தில் குமார்,சி.ஆர்.ஓ. சிவக்குமார்,விற்பனை பிரிவு துணை தலைவர் ஸ்ரீனிவாசன் ஆகியோர் உடனிருந்தனர்.



# தாம்பரம் வட்டார குமரி மக்கள் ஐக்கிய நலச்சங்கத்தின் ஆண்டு விழா

தாம்பரம், நவ.18-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் நடைபெற்ற இந்த விழாவில் பல்வேறு சமூக அமைப்புகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு அரசின் மதிப்பிற்குரிய பால்வளத்துறை அமைச்சர் டீ.மனோ தங்கராஜ் அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களை நேரடியாக சந்தித்து வாழ்த்துரை வழங்கினார்.

மேலும், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி மனோகரன், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். ராஜா உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் டாக்டர் சி.கிறிஸ்துதாஸ், செல்வம், ரசலையன் ஆகியோர் உள்ளிட்ட பல்வேறு சமூக, அரசியல் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இந்த விழாவினை நிறுவனர் தலைவர் நாஞ்சில் ஜான், செயலாளர் தனேஷ் பிஜுபாராஜ், பொருளாளர் நேசஜேக்கப்ராஜன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது இதில் குமரி சமூகத்தினரின் நலனுக்காக செயல்பட்ட தலைவர்களை பாராட்டுவதோடு, எதிர்கால சமூக முன்னேற்றத்திற்கான திட்டங்களும் இந்த நிகழ்ச்சியில் அறிவிக்கப்பட்டன.

நிகழ்ச்சியில் 5வது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன், சகிலா ஜான்சி மேரி, தாம்பரம் வட்டார குமரி மக்கள் ஜக்கிய நலச் சங்கம் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கண்ணணேந்தல் இருந்து பரசுராம்பட்டி கண்மாய்க்கு செல்லும் வரத்து கால்வாய் தூர்வாரும் பணியினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்து பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் மதுரை மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் உடன் உள்ளார்.



# கார்த்திகை தீபம்: தி.மலை பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை, நவ.18-

கார்த்திகை தீபத்தை முன்னிட்டு திருவண்ணாமலையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யக் கோரிய மனுவுக்கு நவ.24 ம் தேதிக்குள் பதில் அளிக்கும்படி தமிழக அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும், டிஜிபிக்கும் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டிசம்பர் 3ம் தேதி நடைபெற இருக்கும் கார்த்திகை தீபத்தை முன்னிட்டு, திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலுக்கு லட்சக் கணக்கான பக்தர்கள் திரள்வர் என்பதால், நெரிசல் சம்பவங்களை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், போதுமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி வழக்கறிஞர் யானை ராஜேந்திரன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அதில், கூட்டத்தை கட்டுப்படுத்தவும், முறைப்படுத்தவும் போதுமான காவல்துறையினரை பணியில் அமர்த்த வேண்டும். கண்காணிப்பு கேமராக்களை பொருத்தி கூட்டத்தை கண்காணிக்க வேண்டும். வாகன போக்குவரத்தை முறைப்படுத்த வேண்டும். வாகனம் நிறுத்துவதற்கு போதுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மருத்துவ வசதிகள் வழங்க தற்காலிக முகாம்கள் அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதேபோல கிரிவலப் பாதையில் போலி சாமியார்கள், திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகளை அனுமதிக்க கூடாது என்றும், கடைகள் அமைக்க அனுமதிக்க கூடாது. கோவிலில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய மாவட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிட வேண்டும்'' என்றும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பி.பி.பாலாஜி, தமிழக அரசு, திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகம், காவல் துறை ஆகியோர் நவ.24ம் தேதிக்குள் பதில் அளிக்க உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்து உத்தரவிட்டார்.





# தென் சென்னை, பள்ளிக்கரணையில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் தடம் எண்: 96 அடையாறு முதல் தாம்பரம் வரை புதிய பேருந்து வழித்தடத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்

பள்ளிக்கரணை, நவ.18-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகு திக்குட்பட்ட பள்ளிக் கரணை பகுதியில் (நவம்பர் : 16) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர். மா. சுப்பிரமணியன் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அடையார் முதல் தாம்பரம் மேற்கு வரை (தடம் எண் :96) பேருந்து சேவையை கொடி அசைத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர்., எஸ். அரவிந்த் ரமேஷ் முன்னிலையில் தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்த தமிழக முதல்வருக்கும், அமைச்சருக்கும், எம்.எல்.ஏ வுக்கும் மகிழ் ச்சியுடன் பொது மக்கள் தனது நன்றியினை தெரிவி த்தனர். நிகழ்வில் 14 வது மண்டலக்குழு தலைவர், எஸ் .வி .ரவிச்சந்திரன், 189 வது மாமன்ற உறுப்பினர், வா. பாபு, 189 வது பகுதி கழக துணைச் செயலாளர்.,குமரேசன் , 190 வது வட்டக் கழகச் செயலாளர்., ஆரோன் (எ)அரசு மற்றும் சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

# சென்னையில் IEEE மெட்ராஸ் பிரிவின் 50 ஆண்டு பொன் விழா கொண்டாட்டம் வெகுசிறப்பாக நடைப்பெற்றது

சென்னை, நவ.18-

சென்னை நுங்கம் பாக்கத்தில் IEEE மெட்ராஸ் பிரிவின் 50 ஆண்டு பொன் விழா கொண்டாட்டம் இன்று நடைப்பெற்றது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் சுமார் 250 கல்லூரிகளுக்கு மேல் IEEE மெட்ராஸ் கிளைகள் செயல்பட்டு வரும் நிலையில் அதன் பொன்விழா ஆண்டை வெகு விமர்சியாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி சென்னையில் நடந்த IEEE மெட்ராஸ் பிரிவின் பொன்விழா நிகழ்ச்சிக்கு தலைவர் சக்திவேல், செயலாளர் ராதா, பொருளாளர் பிருந்தா ஆகியோர் தலைமை தாங்கினார்.

இதில் சிறப்பு விருந்தினராக சென்னை வி.ஐ.டி.பல்கலைகழக சார்பு துணை வேந்தர் தியாகராஜன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில், IEEE என்பது உலகின் மிகப்பெரிய தொழில்நுட்ப தொழில் முறை அமைப்பாகும், இதில் 160க்கும் மேற்பட்ட நாடுகளில் 500,000 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.




தமிழகத்தில் சுமார் 250க்கும் மேற்பட்ட கல்லூரியில் 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களை கொண்டுள்ளதாக தெரிவித்தனர்.

பின்னர் மாலை இன்றைய வாழ்க்கையில் விஞ்ஞான வளர்ச்சி வரமா? சாபமா என்ற தலைப்பில் சிறப்பு சிந்தனை பட்டிமன்றமும், பொறியியல் கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைப்பெற்றது.

பொன்விழா வாழ்த்துரை வழங்கிய IEEE மெட்ராஸ் பிரிவின் முன்னாள் தலைவர்கள் கவுரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் IEEE மெட்ராஸ் பிரிவில் துணை தலைவர்கள் ராமலதா, சண்முகானந்தம், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிகான ஏற்பாடுகளை மிணிணிணி மெட்ராஸ் பிரிவு அலுவகலத்தின் அலுவலர்கள் ராஜன் மற்றும் புவனேஸ்வரி செய்திருந்தனர்.

IEEE மெட்ராஸ் பிரிவு பொன்விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது.

# கோவை தர்மலிங்கேஸ்வரர் கோவிலில் பல லட்சம் மோசடி

கோவை, நவ.18-

கோவை அவினாசி சாலையில் உள்ள தனியார் அரங்கில் மதுக்கரை மரப்பாலம் அருகே அமைந்துள்ள தர்மலிங்கேஸ்வரர் கோவிலில் கடந்த பல ஆண்டுகளாக பல லட்சம் மோசடிகள் குறித்து செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் கோவிலின் முன்னாள் அறங்காவரும், எல்லை மாகாளியம்மன் கோவில் நிர்வாக அலங்காவலருமான தொழிலதிபர் சி.கே.கண்ணன் கூறுகையில்

கோவை மாவட்டம் மதுக்கரை மார்க்கெட் மரப்பாலம் அருகே பலநூற்றாண்டு பெருமைமிக்க தர்மலிங்கேஸ்வரர் திருக்கோவில் உள்ளது. இந்த திருக்கோவிலின் வாழ்நாள் அறங்காவ லராக இருந்த கிருஷ்ணசாமி மற்றும் அறங்காவலராக



இருந்த அரசு போக்குவரத்து கழக ஓட்டுனர் திருமூர்த்தி, பூசாரி பாலசுப்பிர மணியம் மற்றும் ஜெயச்சந்திரன், முரளி, மொபைல் ரவி, எலக்ட்ரீசியன் மயில்சாமி ஆகியோர் கோவிலில் பல்வேறு முறைகேட்டில் ஈடுபட்டதாக புகார் எழுந்தது. அரசு ஊழியராக இருப்பவர்கள் வேறு பொதுத் துறைகளில் பதவி வகிக்க வேண்டும் என்றால் அவர்கள் பணியாற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் முறையான அனுமதி பெற வேண்டும். ஆனால் அரசு பஸ்டிரைவராக பணியாற்றிய திருமூர்த்தி தனது துறை அதிகாரிகளிடம் எந்தவொரு அனுமதியும் பெறாமல் அறங்காவலர் பதவியையும் வகித்து வந்தார். இந்நிகழ்ச்சியில் தொழிலதிபர் சி.கே.கண்ணன் இதில் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் இதுதொடர்பாக விசாரனை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய இந்துசமய அறநிலைய துறையின் 6 அதிகாரிகளை கொண்ட குழுவை நியமனம் செய்தது. இந்த குழுவினர் கோவிலின் வரவு செலவு கணக்குகள், கோவில் நிலங்கள், கோவிலில் நடந்த திருப்பணிகள் தொடர்பாக தீவிரமாக ஆய்வு செய்தனர்.மேலும் எட்டிமடையை சேர்ந்த பாப்பு என்கிற பால சுப்பிரமணியம், தங்கவேலு உள்ளிட்டோரிடம் அதிகாரிகள் குழு விசாரணை நடத்தினர். முதல்கட்ட விசாரணையில் முறைகேடு நடந்ததற்கான ஆதாரங்களை கண்டுபிடித்தனர். இதையடுத்து கிருஷ்ணசாமி வாழ்நாள் அறங்காவலர்பதவியில் இருந்து தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டார் என தெரிவித்தார்.

மேலும் கடந்த 30 ஆண்டுகளில் கோவிலில் நடந்ததாகக் கூறப்படும் மோசடி பணத்தை மீட்டு கோவிலுக்கே ஒப்படைக்க வேண்டும் என்று சிவபக்தர்கள் தமிழக அரசிடம் வலியுறுத்தி வருகின்றனர் என தெரிவித்தார்.



## சிவகங்கை தொகுதி எம்பி பிறந்தநாள் விழா கோவையில் அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் உற்சாக கொண்டாட்டம்

கோவை, நவ.18-

சிவகங்கை நாடாளு மன்ற உறுப்பினர் கார்த்திக் சிதம்பரம் பிறந்த நாளை முன்னிட்டு கோவையில் அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் ஊடகத்துறை தேசிய ஒருங்கிணைப்பாளர் ஹரிஹரசுதன் தலைமையில் கோவை பந்தய சாலையில் உள்ள சாரதாம்பாள் ஆலயத்தில் சிறப்பு பூஜைகள் மற்றும் நீண்ட ஆயுள் பெற சிறப்பு ஹோமம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

அதனை தொடர்ந்து ஏழைப் பெண்களுக்கு இலவசமாக தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டது. இது குறித்து கட்சி பொறுப்பாளர்கள் கூறுகையில் சிவகங்கை தொகுதி எம்பி கார்த்திக் சிதம்பரம் பிறந்தநாள் விழா காவில் சிறப்பாக கொண்டாடி வருகின்றோம் அவர் நீடோடி வாழ வேண்டுமென்று கட்சியின் சார்பாக எனது சார்பாகவும் வாழ்த்துகின்றோம் என்றார். மேலும் பீகாரில் காங்கிரஸ் கட்சி தோல்வி பெற்றதற்கு அதிமுக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி கட்சியை கலைக்க வேண்டும் என்று பேசி வருகிறார் அதற்கு எங்கள் கட்சி சார்பாக கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அதிமுகவை எதிர்த்து மாவட்ட தலைவர் தலைமையில் போராட்டம் நடக்கும் என்று தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் என சுமார் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



## சட்டமன்றத் தேர்தலை புறக்கணிக்கப் போவதாகவும் எஸ் ஐ ஆர் படிவத்தை பூர்த்தி செய்து தரப் போவதில்லை என நான்கு சமுதாய மக்கள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்

தேனி, நவ.18-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் நகராட்சி காலனி பகுதியில் குடியிருந்து வரும் சுமார் 2000 மக்கள் தங்களுக்கு அடிப்படை வசதிகளான சாக்கடை வசதிகள் குடிநீர் வசதிகள் மின் வசதிகள் சாலை வசதிகள் இல்லாமல் மிகவும் தவித்து வருவதாகவும் துப்புரவு பணியாளர்களாக இருக்கும் தாங்கள் நகர்ப்பகுதிகளை தூய்மையாக வைத்துக் கொள்ளவும் குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரிந்து வரும் தங்கள் பகுதி மக்கள் கடந்த 50 ஆண்டு காலமாக அடிப்படை வசதிகளை கோரி போராட்டம் நடத்தி வருவதாகவும் காமராஜர் கலைஞர் எம்ஜி ஆர் ஜெயலலிதா காலத்தில் தங்களுக்கு பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்ட நிலையில் தற்போது வரை ஆளும் அரசன் ஆண்டரசும் தங்களை கைவிட்டு விட்டதாகவும் வேதனை தெரிவித்த அப்பகுதி மக்கள் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களாக இருப்பதால் தங்களைப் புறக்கணிப்பதாகவும் இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு கொடுக்க இருப்பதாகவும் மாவட்ட ஆட்சியர் தங்கள் பகுதியை ஆய்வு செய்ய வர வேண்டும் என்றும் அவ்வாறு வராத பட்சத்தில் எஸ் ஐ ஆர் படிவங்களை பூர்த்தி பூர்த்தி செய்து தர போவதில்லை என்றும் வருகின்ற சட்டமன்றத் தேர்தலை புறக்கணிக்க போவதாகவும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களான அருந்ததியர் மக்கள் வேதனுடன் தெரிவித்தனர்.

## சென்னை மின்சார ரயில் முதல் வகுப்பு பெட்டிகளில் மகளிர் இருக்கைகள் ஆக்கிரமிப்பு:

### நடவடிக்கை எடுக்க பயணிகள் கோரிக்கை

சென்னை: நவ.18-

சென்னை மற்றும் புறநகர் மக்களின் பொது போக்குவரத்தில் மின்சார ரயில் சேவை முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்த மின்சார ரயில் சேவையை பொருத்த வரை, சென்னை கடற்கரை தாம்பரம், செங்கல்பட்டு, சென்னை கடற்கரை வேளச்சேரி உட்பட பல வழித்தடங்களில் இயக்கப்படுகின்றன.



இந்நிலையில், பெண்களின் இருக்கைகளை ஆண்களும், முதல் வகுப்பு டிக்கெட் எடுக்காதவர்களும் ஆக்கிரமித்து வருவதால், பெண் பயணிகள் சிரமத்தை சந்தித்து வருகின்றனர். இது குறித்து, திருநின்றவூர் பயணிகள் பொதுநலச் சங்க தலைவர் முருகையன் கூறியதாவது: மின்சார ரயில்களில் முதல் வகுப்பு பெட்டிகளில் பெண்களுக்கென தனி பகுதி உள்ளது.

காலை, மாலை, நெரிசல் மிகுந்த நேரங்களில் இந்த முதல் வகுப்பு பெட்டிகளில் பெண்கள் பகுதிகளில் உள்ள இருக்கைகளை ஆண்கள் ஆக்கிரமித்து வருகின்றனர். குறிப்பாக இந்த இருக்கைகளை ஆண் பயணிகள், இரண்டாம் வகுப்பு டிக்கெட் எடுத்து முதல் வகுப்பில் பயணிப்பவர்கள் ஆக்கிரமித்து கொள்கின்றனர்.

இதனால், பெண் பயணிகள் கூட்ட நெரிசலில் நின்றபடி பயணிக்கும் அவலநிலை உள்ளது. இது குறித்து, ரயில்வே நிர்வாகத்திடம் கோரிக்கை வைக்கப்பட்ட நிலையில், ஓரிரு நாட்கள் மட்டும் டிக்கெட் பரிசோதகர்கள் கண்துடைப்பாக ஆய்வுசெய்து சென்று விடுகின்றனர்.

இப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காண வேண்டும். முதல்வகுப்பு பெட்டிகளில் பெண்கள் பகுதிகளில் ஆண்கள் பயணிக்கக் கூடாது. முதல்வகுப்பு பெட்டிகளில் இரண்டாம் வகுப்பு டிக்கெட் எடுத்தவர்கள், வியாபாரிகள் பயணிப்பதை தடுக்க வேண்டும். முதல்வகுப்பு பெட்டிகளில் அதற்குரிய டிக்கெட் எடுத்தவர்கள் தான் பயணிக்கிறார்கள் என்பதை பரிசோதனை மூலமாக உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



■ மதுரை தமுக்கம் மைதானத்தில் அகில இந்திய அளவிலான சரஸ் மேளா நடைபெறவுள்ளதை முன்னிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., கொடியசைத்து துவக்கி வைத்தார்.



## தமிழ்நாடு துணை முதலமைச்சரிடம் வாழ்த்து பெற்ற சேர்மன்

சிவகங்கை, நவ.18-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகரில் நடைபெற்ற பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறையின் சார்பில் காரைக்குடி மாதிரி மேல்நிலைப் பள்ளியில் மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் சிவகங்கை நகர்மன்றத் தலைவரும் சிவகங்கை திமுக நகர்க்கழக செயலாளருமான சி. எம். துரை ஆனந்த் அவர்கள் புத்தகம் வழங்கி வாழ்த்து பெற்றார்.

இந்த நிகழ்ச்சியின்போது அமைச்சர் பெருமக்கள் கூட்டுறவுத்துறை கேஆர். பெரியகருப்பன் , பள்ளிக்கல்வித்துறை அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சிவ. வீ. மெய்யநாதன், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் ஆ. தமிழரசி ரவிக்குமார், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ். மாங்குடி, மாவட்ட ஆட்சியர் கா. பொற்கொடி, வணக்கத்திற்குரிய மாநகர மேயர் சே. முத்துத்துரை, வணக்கத்திற்குரிய துணை மேயர் குணசேகரன் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்...



## செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 3வது மண்டலம் வார்டு 41, 42 பகுதிகளில் புதிய உயர் மின் கோபுரம் திறந்து வைக்கப்பட்டது

செங்கல்பட்டு, நவ.18-

செம்பாக்கம் பகுதி கழகச் செயலாளர் சுரேஷ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மக்களின் நீண்டநாள் கோரிக்கையான மின்விளக்கு வசதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி ஆர் பாலு அவர்கள் தொகுதியில் மேம்பாட்டு நிதியிலிருந்து உயரமும் கோபுரம் விளக்கை திறப்பு விழாவிற்கு வருகை தந்த தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். ராஜா அவர்கள் கலந்து கொண்டு உயர் மின் கோபுரத்தை திறந்து வைத்து பொதுமக்களுக்கு அர்ப்பணித்தார்.

இந்த உயர் மின் கோபுரம் நிறுவப்பட்டதன் மூலம், அந்தப் பகுதியில் இதுவரை காணப்பட்ட இருள்மிக்க தெருக்கள் இனி முழுமையாக ஒளிர இருப்பதாக பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

தாம்பரம் மற்றும் சுற்றுவட்டாரங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகள் தொடரும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர்கள் கற்பகம் சுரேஷ், கல்யாணி மணிவேல், 42வது வட்ட செயலாளர் மணிவேல் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## நவ.22ல் மேலும் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு: இந்திய வானிலை ஆய்வு மையம்

சென்னை, நவ.18-

நவ.22 ஆம் தேதி வங்கக் கடலில் மேலும் ஒரு புதிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் இலங்கை கடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி நிலவுகிறது. இது மேற்கு வடமேற்கு திசையில் மெதுவாக நகர்ந்து செல்லும் என சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இதன் காரணமாக இன்று கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும் உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில், கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களில் நவம்பர் 21, 22 ஆம் தேதிகளில் கன மழை முதல் மிக கனமழை பெய்யும். நவ.22 ஆம் தேதி வங்கக்கடலில் மேலும் ஒரு புதிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது. இது மேற்குவடகிழக்கு நோக்கி நகர்ந்து அடுத்த 48 மணி நேரத்தில் மேலும் வலுப்பெற வாய்ப்பு உள்ளது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.




## சிவகங்கை நகராட்சி மற்றும் வீரமங்கை வேலுநாச்சியார் அரிமா சங்கம் சார்பில் உலக கழிப்பறை தின நிகழ்ச்சி

### நகர் மன்ற தலைவர் துரை ஆனந்த், ஆணையாளர், வித்யா கணபதி பங்கேற்பு

சிவகங்கை, நவ.18-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை நகராட்சி, சுலாப் இண்டர்நேஷனல் சமூக சேவை நிறுவனம் இணைந்து நடத்திய மாஸ் கிளீனிங் நிகழ்ச்சி நடைபெற்றது.

நகர்மன்றத் தலைவர் சி. எம். துரை ஆனந்த் தலைமையிலும் சிவகங்கை நகராட்சி ஆணையாளர் அசோக்குமார், சிவகங்கை வீரமங்கை வேலுநாச்சியார் அரிமா சங்கத் தலைவரும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழு உறுப்பினருமான ஸ்ரீ வித்யா கணபதி ஆகியோரது முன்னிலையிலும் நடை பெற்றது. இந்த நிகழ்ச்சியில் திமுக நகர்க்கழக நிர்வாகிகளான இலக்கிய அணி முத்துக்கண்ணன், சுற்றுசூழல் அணி சுப.ஜெய க்குமார், வழக்கறிஞர் வேலூர் காட்டு ராஜா, மற்றும் நகராட்சி அலுவலர்கள், சுகாதார பணியாளர்கள் உள்ளிட்ட அரிமா சங்க நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




## காட்பாடி, திருவலம் பேரூராட்சியில் ரூ,15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய உடற்பயிற்சி கூடம் திறப்பு விழா

### நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பங்கேற்று திறந்து வைத்து சிறப்புரை

காட்பாடி, நவ.18-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, திருவலம் பேரூராட்சியில் காட்பாடி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் திருவலம் பேரூராட்சியில் சுமார் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள உடற்பயிற்சி கூடத்தை, 60 ஆண்டு கால மூத்த காட்பாடி சட்டமன்ற உறுப்பினரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் திறந்து, குத்து விளக்கு ஏற்றி வைத்து, சிறப்புரையாற்றி சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, எம்.பி.கதிர் ஆனந்த், காட்பாடி ஒன்றிய குழு துணை தலைவர் எஸ்.சரவணன், பேரூராட்சிகள் உதவி இயக்குனர் ஞானசுந்தரம், காட்பாடி வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன், திருவலம் பேரூராட்சி மன்ற தலைவர் சாமுண்டிஸ்வரி ரவி, துணை தலைவர் நேரு, பேரூராட்சி செயல் அலுவலர் கோபிநாதன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் காட்பாடி வட்டார தலைவர் ஜி.கே.கன்செஷன்ட்ஸ் ஜெ.கணேஷ், அரசு துறை ,சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்..



## காட்பாடி பிரம்மபுரத்தில் ரூ.11 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பயணிகள் நிழற்க்கூடம் திறப்பு விழா

காட்பாடி, நவ.18-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பிரம்மபுரம் ஊராட்சியில் காட்பாடி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.11 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பயணிகள் நிழற்கூடத்தை, 60 ஆண்டு கால மூத்த காட்பாடி சட்டமன்ற உறுப்பினரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நிழற்க்கூடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, எம்.பி. கதிர் ஆனந்த், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா, காட்பாடி வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன், காட்பாடி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நந்தகுமார், கனகராஜ், ஒன்றிய குழு துணை தலைவர் எஸ்.சரவணன், பிரம்மபுரம் ஊராட்சி மன்ற தலைவர் ராதாகிருஷ்ணன், ஒன்றிய குழு உறுப்பினர் இலக்கியா சந்துரு, வட்டார வளர்ச்சி அலுவலக பணியாளர் பாலசுப்ர மணியன், அரசு துறை சார்ந்த அலுவலர்கள், பணியா ளர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# மதுரையில் அகில பாரத ஐயப்ப சேவா சங்க சார்பாக சபரிமலை யாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம்

மதுரை, நவ.18-

அகில பாரத ஐயப்ப சேவா சங்க மதுரை மாவட்ட யூனியன் சார்பாக சபரிமலை யாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு ஞாயிறு காலை கள்ளந்திரி சாஸ்தா முதியோர் இல்லம் கள்ளந்திரி பாசன கால்வாய் அருகில் துவக்கி வைக்கப்பட்டது. மதுரை மாவட்டத் தலைவர் ஐ.குருசாமி,வி. பாலமுருகன், முகாம் அலுவலர் மற்றும் மாவட்ட பொருளாளர் த.சின்னசாமி முன்னிலையில் தமிழ் மாநில அமைப்பின் தலைவர்மு.விஸ்வநாதன் அன்னதானத்தை தொடங்கி வைத்தார். மேலும் மதுரை மாவட்டத்தின் சார்பில் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் வரும் 22-ந் தேதி முதல் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. அன்னதானம் துவக்க விழாவில் இணை முகாம் அலுவலர்கள் சி.சிவராஜன், ஷி.க்ஷி.வி சந்தனபெருமாள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், கிளை செயலாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

# ஆலன் இன்ஸ்டிட்யூட் SOPAN 2025 மதுரையில் வெற்றிகரமாக நடந்தது



மதுரை, நவ.18-

ஆலன் கரியர் இன்ஸ்டிட்யூட் பிரைவேட் லிமிடெட் ராஜா முத்தையா மன்றத்தில் தனது ஆண்டு கொண்டாட்டமான SOPAN 2025–ஐ நடத்தியது. ஆலன் மதுரையில் நடைபெற்ற இந்த ஆண்டு SOPAN விழா, 9 சிறப்பு பெருமைக்குரிய விருந்தினர்களும் 20 பள்ளி முதல்வர்களும் கலந்து சிறப்பித்த பாராட்டு விழாவாக இருந்தது. SOPAN என்பது பல்வேறு ஒலிம்பியாட்கள், IIT JEE, மற்றும் NEET (UG) தேர்வுகளில் தகுதி பெற்ற மதுரை மாணவர்களைப் பாராட்டும் ஆலனின் ஆண்டு கொண்டாட்டமாகும்.

உச்சநீதிமன்றம் முன்னாள் தலைமை நீதிபதி, மார்கண்டேய கட்ஜு, தமிழ்நாடு முன்னாள் செயலர், எம். கருணாகரன் (ஓய்வு IAS), கலெக்டர் PAG, சந்திர சேகர், விக்ரம் மல்டி ஸ்பெஷா லிட்டி ஹாஸ்பிட்டல், மதுரை, மேலாளர், டாக்டர் வீர ராஜ குமார், மதுரை மெடிக்கல் கல்லூரி, டீன், டாக்டர் அருள் சுந்தரேஷ் குமார், ராமகிருஷ்ணா கல்வி நிறுவனம், பெரம்பலூர், தலைவர், டாக்டர் சிவசுப்பிரமணியம், BNI மதுரை, MD, ஹரி பிரசாத், கல்வி குழும பள்ளிகள், தலைவர், டாக்டர் செந்தில் குமார் மற்றும் ஜெயப்ரியா வித்யாலயா கல்வி நிறுவனங்கள், இயக்குநர், நாகசாமி சுரேஷ் தினேஷ் - ஆகியோர் நிகழ்வை நேரில் கண்டு சிறப்பித்தனர்.

ஆலன் நடத்திய SOPAN, மதுரை பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 533 மாணவர்கள், பள்ளி முதல்தர மாணவர்கள், TALLENTEX முதல்தர மாணவர்கள், நீட்(யுஜி) 2025-இல் தேர்ச்சி பெற்ற 25 வளரும் மருத்துவர்கள், 4 ஐஐடி ஜேஇஇ 2025 மாணவர்கள், 4 என்ஐடி மாணவர்கள் மற்றும் 2 ஐஐ எஸ்இஆர் மாணவர்களைப் பாராட்டும் தளமாக மாறியது. SOPAN மதுரையில் Toppers Talk ஒன்று நடத்தப்பட்டது. இதில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் இடம் பெற்ற ஆதித் சஞ்சீவ்.ஏ, ஷண்முக பிரியன். எல், புவனிகா ஸ்ரீ.பி மற்றும் சுபன் கார்த்திக்.என், ஐஐடி பாம்பே-யில் இடம் பெற்ற சந்தோஷ்.டி, மேலும் என்ஐடியில் சேர்ந்த 2 மாணவர்கள் சஞ்சய்.எஸ் மற்றும் கவுதமன்.டி ஆகியோர் பங்கேற்று தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்தனர்.

ஆலன் தெற்கு மண்டலங்களின் துணைத் தலைவர், மகேஷ் யாதவ் கூறுகையில், மதுரையின் திறமை, IIT மும்பை, IIT சென்னை, IIT காரக்பூர், IIT காந்திநகர் முதல் NIT திருச்சி மற்றும் NIT காளிக்கட் வரை, IISER மோகாலி மற்றும் திருவனந்தபுரம் வரை உள்ள தேசிய புகழ்பெற்ற சிறப்புத் திறன் நிறுவனங்களில் இடம்பிடிப்பதும், அதனுடன் 25 இளம் மருத்துவர்கள் இணைவது கொண்டாடத்தக்க ஒரு அளவுகோலை உருவாக்கியுள்ளது. இந்த வெற்றிக்கான புகழ் மாணவர்களுக்கும், அவர் களின் பெற்றோ ருக்கும், ALLEN கல்விக் குழுவுக்கும் செல்கிறது. ALLEN மதுரை அணியிடம் நான் உயர்ந்த எதிர்பார்ப்புகளை வைத்துள்ளேன், மேலும் வரும் கல்வியாண்டில் அவர்கள் தங்களின் முந்தைய சாதனையை மீறும் என நம்புகிறேன்" என்றார்.



# புகழ்பெற்ற காட்பாடி பிட்ஜி குளோபல் பள்ளியில் 25 உலக சாதனைகள்: பள்ளி முதல்வர் பொங்கல் புனிதா தகவல்

காட்பாடி, நவ.18-


வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, கடலூர் டு சித்தூர் தேசிய நெடுஞ் சாலை, மெட்டுக்குளம், புகழ்பெற்ற காட்பாடி சமீரா கார்டன் சிட்டி, பிட்ஜி குளோபல் பள்ளி உள்ளது. இந்த பள்ளியின் முதல்வர் பொங்கல் புனிதா செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: பிட்ஜி குளோபல் பள்ளியில் 481 மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். 50 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். இந்த பள்ளி தொடங்கி 5 ஆண்டுகள் ஆகிறது. 5வது ஆண்டு கல்வி சிறப்பை கொண்டாடும் வகையில் எப்.ஜி.எஸ் உலக சாதனை விழா நடைபெற உள்ளது. இதில் 9 குழு மற்றும் 16 தனி நபர் சாதனைகள் செய்யப்பட உள்ளன இவை எலைட் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ், ஆசியன் சாதனை புத்தகம், இந்தியன் சாதனை புத்தகம், தமிழன் சாதனை புத்தகம் ஆகியவற்றால் சான்றளிக்கப்பட உள்ளது. தனிநபர் சாதனைகள் 15ம் தேதி தனிநபர் உலக சாதனைகளை மாணவர்கள் செய்தனர். இதில் 6ம் வகுப்பு மாணவர் அங்கித் சரண் தொடர்ச்சியான மிக நீண்ட உறுமி கலை சாதனை, 7ம் வகுப்பு மாணவன் அஜய் ஆதவன் விளையாட்டுத் துறையில் 2 மணி நேரத்தில் 20 மீட்டர் வில்வித்தை இலக்கில் 400 அம்புகளை எய்தி சாதனை படைத்தனர். 5ம் வகுப்பு மாணவி பத்ரா தொடர்ந்து ஏழு மணி நேரம் பிராட்காஸ்ட் நிகழ்ச்சியில் நீண்ட நேரம் சரளமான பேச்சுத் திறன், படைப்பாற்றல், கதை சொல்லும் ஆர்வத்தை வெளிப்படுத்தி பேசினர்.

5ம் வகுப்பு மாணவரான நேத்ரன் 20 நிமிடங்களில் பானையின் மேல் அதிக எண்ணிக்கையிலான யோகாசனங்கள் செய்யும் சாகச நிகழ்ச்சியையும், 9ம் வகுப்பு மாணவி வான் வாலென்டினா, ஒரே புத்தகத்தில் அதிகமான கவிதைகளை வெளியிட்ட இளம் பெண் எழுத்தாளர் என்ற பிரிவில் 120 கவிதைகளை வெளியிட்டு தன் படைப்பாற்றலை வெளிப்படுத்தினர். தொடர்ந்து 21, 22ம் தேதிகளில் குழு உலக சாதனைகள் நிகழ்ச்சியும், 29ம் தேதி பாராட்டு விழாவும் நடைபெறவுள்ளதாக கூறினார். செய்தியாளர் சந்திப்பின் போது துணை முதல்வர் ராகுல் உடனிருந்தார்.





■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மற்றும் சிங்கம்புணரி பகுதியில் அரசின் பல்வேறு நல திட்ட உதவிகளை வழங்க வந்த தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வருகை புரிந்தார் அவரை தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பாக ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் ஆற்றல் அரசர் த.அமிர்தகுமார் தலைமையில் காரைக்குடிக்கு வருகை புரிந்த தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்தும் சங்கம் தொடர்பாக கோரிக்கை வைத்தனர் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில துணை பொதுச்செயலாளரும் கிராம நிர்வாக அலுவலர் சங்கம் தமிழ்நாட்டின் மாநிலப் பொதுச் செயலாளருமான இரா.அருள்ராஜ் மற்றும் சங்கத்தினர்,உடன் தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் ரிஸி.பெரியகருப்பன் ,காரைக்குடி தனிவட்டாட்சியர் கந்தசாமி, காரைக்குடி மண்டல துணை வட்டாட்சியர் மருதுபாண்டியர், அலுவலக உதவியாளர் மாரிமுத்து உட்பட்ட பலர் உடனிருந்தனர்.



# வேலூர் விஐடி பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் விஐடி பல்கலைக்கழகம் சார்பில் மாபெரும் தனியார் வேலை வாய்ப்பு முகாம்

## மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி மற்றும் விஐடி துணைத் தலைவர் ஜி.வி.சங்கர் பங்கேற்பு

காட்பாடி, நவ.18-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி, வேலூர் விஐடி பல்கலைக்கழக வளாக கூட்டரங்கில், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டி மையம் தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் வி.ஐ.டி பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் வேலை வாய்ப்பு முகாமை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையிலும், விஐடி பல்கலைக்கழக துணைத் தலைவர் ஜி.வி.சங்கர் விஸ்வநாதன் முன்னிலையிலும், தொடங்கி வைத்து, தனியார் நிறுவனங்களுக்கு பணிக்கு தேர்வான வேலை நாடுநர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாநகராட்சி 1வது மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மகளிர் திட்ட இயக்குனர் பாலமுருகன். வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை உதவி இயக்குனர் காந்தி, திறன் மேம்பாட்டு கழக உதவி இயக்குனர் காயத்ரி மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், வேலை நாடுனர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# சென்னை தெற்கு மாவட்ட சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 15வது மண்டல அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம்

சோழிங்கநல்லூர், நவ.18-

சென்னை மாநகராட்சி சோழிங்கநல்லூர் 15வது மண்டல அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் (நவம்பர் : 17) அலுவலகத்தில் மாதாந்திர ஆலோசனை நடைபெற்ற கூட்டத்தில் 15 வதுமண்டல குழு தலைவர், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி செயலாளருமான, வி .இ.மதியழகன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் தங்களின் கோரிக்கைகளை தெரிவித்தனர். மண்டல குழு தலைவர் உடனடியாக சென்னை மாநகராட்சி அலுவலர்களிடம் பணிகளை விரைந்து முடிக்குமாறு உத்தரவிட்டார்.மண்டல கூட்ட அரங்கில் கலந்து கொண்ட மாமன்ற உறுப்பினர்கள், ஏகாம்பரம், சங்கர் ,முருகேசன், கோவிந்தசாமி, மேனகா சங்கர், அஸ்வினி கருணா, லியோ சுந்தரம் மற்றும் மாநகராட்சி ஆணையாளர், உதவி ஆணையாளர் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.





# இளையான்குடியில் அஇஅதிமுக பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம்

இளையான்குடி, நவ.18-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி இளையான்குடி பேரூர், தெற்கு ஒன்றியம், கிழக்கு ஒன்றியம், வடக்கு ஒன்றியம் சார்பில் பாக முகவர்கள் (BLA-2) ஆலோசனைக் கூட்டம் இளையான்குடி பேரூர் கழக செயலாளர் எம்.ஏ. நாகூர் மீரா ஏற்பாட்டில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அ.பாரதிராஜன் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் K.ஜெகதீஸ்வரன் முன்னிலையில் கழக அமைப்பு செயலாளர் ஏ.கே.சீனிவாசன் தலைமையில் மாவட்டக்கழக செயலாளர் பி.ஆர்.செந்தில் நாதன் தலைமையிலும் ஆலோ சனை கூட்டம் நடைபெற்றது

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.நாக ராஜன் எம்.குணசேகரன் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் இரா. இளங்கோவன் கழக எம்.ஜி.ஆர் இளைஞரணி துணை செயலாளர் VGB. கருணாகரன் கழக அம்மா பேரவை துணை செயலாளர் M.தமிழ்செல்வன் கழக இளைஞர் பாசறை துணை செயலாளர் துளாவூர் M.பார்த்திபன் முன்னாள் ஒன்றிய சேர்மன்கள் A.C.மாரிமுத்து M.முணியாண்டி மாவட்ட விவசாய அணி துணை செயலாளர் M.குமரேசன் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் எஸ்.செல்வராஜ் மாவட்ட அம்மா பேரவை துணை செயலாளர்



உ.மலைச்சாமி மாவட்ட சிறுபாண்மை பிரிவு இணைச் செயலாளர் O.M.மௌலானா செய்யது மாவட்ட தகவல் தொழில் நுட்ப பிரிவு இணை செயலாளர் எல்.முருகன் மாவட்ட சிறுபாண்மை பிரிவு துணை செயலாளர் எம்.செய்யது அன்சாரி மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞரனி துணை தலைவர் U.உதயச்சந்திரன் பேரூர் அம்மா பேரவை செயலாளர் H.செய்யது இபுறாகிம் பேரூர் கழக பொருளாளர் J.அப்பாஸ் அலி பேரூர் எம்.ஜி. ஆர் மன்ற செயலாளர் S.தாவூது பாட்சா பேரூர் கழக துணை செயலாளர் எம்.திருநாவுக்கரசு S.அபுல்கலாம் ஆசாத் வார்டு செயலார்கள் R.சிவக் குமார், தெய்வேந்திரன், M. முகம்மது மைதீன், K.M.ரபி முகம்மது, R.அயுப்கான், அரசேந்திரன், M.செல்வம், கலில் அஹமது, கோஸ் அப்துல்காதர், கீழாயூர் செய்யது இபுறாகிம், கதிரேசன், முனீஸ்வரி, காளீஸ்வரி, தன்ராஜ், சங்கன், அன்சாரலி, ராஜ் குமார், திவான் முகம்மது, அலி அக்பர், ஜாகிர் உசேன், முகம்மது அஸ்லம் ஒன்றிய கழக நிர்வாகிகள் P.K. செல்லம், சுகுமாறன், தங்கராசு, பாலா, கேசவன், உடையப்பன், கரிகாலன், நடராஜன், வெற்றி வேலன், சக்திகுமார் , தங்கதுரை, துரைசிங்கம், பெரியசாமி, திணேஷ், நவசக்தி, மதிக்கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சத்தீஸ்கர் என்கவுன்ட்டரில் மாவோயிஸ்ட்கள் 3 பேர் உயிரிழப்பு

ராய்ப்பூர், நவ.18-

சத்தீஸ்கர் என்கவுன்ட் டரில் 3 மாவோயிஸ்ட்கள் உயிரிழந்தனர்.

சத்தீஸ்கரின் சுக்மா மாவட்டத்தில் மாவோயிஸ்ட் நடமாட்டம் இருப்பதாக போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில், வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் நேற்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.



அப்போது மறைந்திருந்த மாவோயிஸ்ட்கள் துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தினர். இதையடுத்து தற்காப்புக்காக பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தினர். இரு தரப்பினருக்கும் இடையே நடந்த கடும் துப்பாக்கிச் சண்டையில் 2 பெண்கள் உட்பட 3 மாவோயிஸ்ட்கள் உயிரிழந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161